**தலைப்பு 121 - உள்நாட்டலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் இரண்டாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் மற்றும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் 3.1.1 ஆம் அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட வருமான குறியீட்டுகளுக்குரிய வருமான கணக்கும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும், இணக்கக் கூற்றுக்களில் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகள் தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தில் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு விடயப் பரப்பு**

---

தலைப்பு 121 – உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தெம்பர் 11 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம்

என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உள்நாட்டலுவல்கள் அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.17 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அதன் ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. | செயல்நடவடிக்கைத் திட்டம் போதியளவான பிரகாரம் திட்டமிடப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2.1 |
| | | 2. | பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்படாமை / போதியளவான பிரகாரம் திட்டமிடப்படாமை | 2.4 |
| | | 3. | பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை | 2.15 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் வேண்டும். | 1. | முகாமைத்துவத்தில் குறைபாடு | 2.8 |
| | | 2. | தீர்வு காணப்படாத கணக்காய்வு பந்திகள் | 2.7 |
| | | 3. | இணங்காமைகள் | 2.16 |
| | | 4. | மனிதவள முகாமைத்துவத்தில் குறைபாடு | 2.17 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின | 1. | செயல்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம் | 2.3.2 |

| | | | | |
|---|---|---|---|---|
| | விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையில் அமைச்சில் நுண் பரிசீலனைக்கு உட்படுத்தல் | 2. | வெளிநாட்டுதவி செயற்திட்டங்களில் செயலாற்றல் நிறைவேற்றப்படாமை | 2.3.2 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கியமை. | 1. | சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை | 2.5(ஆ) |
| | | 2. | வாகனங்களைப் பயன்படுத்துவதில் குறைபாடு | 2.5(இ) |
| | | 3. | நிதி மற்றும் செயற்பாட்டு வாடகைக் கொள்வனவு முறையின் கீழ் வாகனங்களைப் பயன்படுத்துதலில் குறைபாடு | 2.5(ஈ) |
| | | 4. | அலுவலகங்களை நடாத்திச் செல்வதில் குறைபாடு | 2.5(உ) |
| | | 5. | வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள் | 2.5(எ) |
| | | 6. | ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல் | 2.5(ஏ) |
| | | 7. | பொதுமக்களுக்கான சேவை நிறைவேற்றுவதில் பலவீனம் | 2.9 |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படு வதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சில் பரீட்சிக்கப்பட்ட தெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல் | | பொது வைப்புக் கணக்குகளில் குறைபாடு | 2.14 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு | | குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடுகளின் மூலம் பெறப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்துவதில் குறைபாடு | 2.11(இ) |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சினால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | | |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | 1. வருமானக் கணக்குகளில் குறைபாடுகள் | 2.12 |
| | | 2. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்கணக் கணக்கில் குறைபாடுகள் | 2.13 |
| 127(7) | உத்தியோகத்தர்கள் ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப்பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும்,<br>நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் / மிகைக் கட்டணங்களை விதிப்பதற்கும் கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைகளுக்கு பொறுப்பாகுதல். | நட்டம் மற்றும் இழப்பு | 2.6 |

## 2 போதியளவு மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் 2018 ஆம் ஆண்டின் போது திருத்தம் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அமைச்சினால் நிறைவேற்ற வேண்டிய 11 பிரதான பணிப்பொறுப்புக்களை அமுல்படுத்துவதற்கான 125 செயற்பாடுகளை உள்ளடக்கி அமுல்படுத்தும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டு நிதி தேவைத் திட்டம் (Imprest Requiremennt Plan) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் நிறைவேற்றப்படுகின்றன.

#### (அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சினால் 125 பணிகள் நிறைவேற்ற வேண்டியிருந்த போதிலும், அதில் 6 பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்படாமை

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 125 பணிகளை நிறைவேற்றுவதற்காக திட்டமிடப்பட்ட 17 செயற்திட்டங்களுக்கிடையே 16 செயற்திட்டங்களுக்காக ரூபா 10,280.11 மில்லியன் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதில் 14 செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டத்தை அடையாமை 28 சதவீதம் 100 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

#### (இ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

அமைச்சினால் 09 செயற்திட்டங்களுக்காக ரூபா 353.5 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டு அதில் ரூபா 83.001 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவற்றின் நிறைவேற்றும் செயன்முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

### 2.3 அமுல்படுத்தப்பட்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுதவி செயற்திட்டங்கள்

#### 2.3.1 உள்நாட்டு செயற்திட்டம்

வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணங்களால் பாதிப்புக்குள்ளான மாவட்டங்களுக்கிடையே 8 மாவட்டங்களுக்காக சலுகை வழங்கலாக வெளிநாட்டுதவி செயற்திட்டத்தின் மூலம் ரூபா 307.46 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 287.98 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 19.48 மில்லியன் அதாவது ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 6.33 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.3.2 வெளிநாட்டுதவி செயற்திட்டங்கள்

**வெளிநாட்டுதவி செயற்திட்டத்தின் செயலாற்றல்**

செயற்திட்டத்தின் கீழ் காலி மாவட்ட செயலகத்தால் 04 மின்பிறப்பாக்கி இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொண்டு வழங்குனர் நிறுவனமொன்றுடன் 2018 சனவரி 19 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த இயந்திரங்கள் 2018 யூன் 23 ஆந் திகதியே கிடைத்திருந்தது. எனினும், செயற்திட்டக்காலம் 2018 மார்ச் 09 ஆந் திகதி வரை 04 மாதங்களினால் நீடிக்கப்பட்டிருந்தமையால் தொடர்ந்தும் நீடித்தல் நிராகரிக்கப்பட்டிருந்த போது செயற்திட்டத்தின் கீழ் கைப்பற்றப்பட்ட நிலையான சொத்துக்களாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 18,232,557 தொகையான இந்த 04 மின்பிறப்பாக்கி இயந்திரங்களின் கிரயம் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 2.4 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்

அமைச்சினால் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வழங்கல் மற்றும் சேவைகளைப் பெறுவதற்கு ரூபா 744.13 மில்லியன் தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 519.66 மில்லியன் தொகையான நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 224.47 மில்லியன் அதாவது வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 30.16 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.4.1 பெறுகைத் திட்டமிடல்

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல் மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 744.13 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 519.66 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அமைச்சினால் பிரதான பெறுகைத் திட்டம், ஆரம்ப பெறுகைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.2 பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துதல்

உத்தியோகபூர்வ நோக்க நடமாடும் சேவைக்காக ரூபா 10,060,000 செலவில் 100 கணனிகளைக் கொள்வனவு செய்வதற்கு 2016 திசெம்பர் மாதத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசைப் பெறுவதற்கு முன்னர் அதற்காக பெறுகைகள் குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இக் கணனிகள், பொருட்கள் எடுத்துச் செல்லும் பத்திரத்தின் பிரகாரம் 2017 சனவரி மாதத்தில் காலி மாவட்ட செயலகம் பொருட்களை கையேற்றிருந்த போதும், அக்கணனிகள் 2017 பெப்ரவரி மாதத்தின் போதே அமைச்சிற்குக் கிடைத்திருந்தது.

### 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) சொத்துக்களை பதிவேடுகளுக்குக் கொண்டுவரல்**

அமைச்சினால் 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திற்கு தகவல் சமர்ப்பிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த மாதிரிப் படிவத்தின் பிரகாரம் சகல தகவல்களையும் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது.

(i) வாகனங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல் பத்திரங்களில் பெறுமதி தொடர்பான தகவல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மரத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணப் பதிவேட்டில் காணப்படுகின்ற அலகுகளின் எண்ணிக்கை மற்றும் குறியீடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

இரண்டு சந்தர்ப்பங்களின் போது விபத்திற்குட்பட்டு பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 117,116 தொகை செலவிடப்பட்டிருந்த 02 மோட்டார் வாகனங்கள் வாகனத் தரிப்பிடத்திலும், வீதியிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களின் போது விபத்து ஏற்பட்டமையின் காரணமாக சாரதி தனது பொறுப்பிலிருந்து நீங்கியிருந்தார்.

**(இ) வானகப் பயன்பாடு**

அமைச்சிற்குச் சொந்தமான மீளாய்வாண்டில் இறுதியளவில் 43 வாகனங்கள் காணப்பட்டதுடன் 33 வாகனங்களில் மாத்திரம் ஓடப்பட்ட மைலோ மீற்றரின் அளவு, அதற்கான எரிபொருள், மற்றும் உராய்வு எண்ணெய், வாகனங்களை சேர்விஸ் செய்தல், வாகனங்களின் பழுதுபார்த்தல் மற்றும் வாகனங்களைக் காப்புறுதி செய்வதற்காக செலவிடப்பட்ட பெறுமதி தொடர்பான விபரம் சமர்ப்பிக்கப்படவில்லை.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சிற்குச் சொந்தமான 03 வாகனங்களுக்கு மாத்திரம் எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப்பட்டிருந்தது.

(ii) 2018 மார்ச் 19 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் ஓட்ட நிலையில் காணப்படாத வாகனங்கள் 2018 யூன் 30 ஆந் திகதி முன்னர் அகற்றுமாறு காண்பிக்கப்பட்டிருந்தும் அமைச்சுக்குரிய அகற்றக்கூடிய நிலையில் காணப்படுகின்ற வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நிதி மற்றும் குத்தகை அடிப்படையின் கீழ் வாகனங்களின் பயன்பாடு**

அமைச்சினால் நிதிக் குத்தகை முறையின் கீழ் 16 வாகனங்களும் செயற்பாட்டு வாடகை கொள்வனவு முறையின் கீழ் ஒரு வாகனமும் பெறப்பட்டிருந்ததுடன் செயற்பாட்டு வாடகைக் கொள்வனவு தவணையாக ரூபா 488,750 தொகை மாதாந்தமும் எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணைக்காக ரூபா 104,848 தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

**(உ) அலுவலகத்தை நடாத்திச் செல்லும் செலவினம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சு 03 கட்டிடங்களில் நடாத்திச் செல்லப்படுவதுடன் பிரதான அலுவலகம் வாடகை இன்றிய கட்டிடம் ஒன்றிலும், வருடாந்தம் ரூபா 29,559,600 வாடகையின் அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடம் ஒன்றில் ஒரு அலுவலகமும் நடாத்தப்படுகின்றது. மற்றைய அலுவலகம் 2016 ஆம் ஆண்டின் போது இரண்டு வருட காலத்திற்காக குத்தகை முறையின் கீழ் பெறப்பட்ட கட்டிடம் ஒன்றில் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதற்கான வாடகை 2018 ஆகஸ்ட் மாதம் வரையிலும் மதிப்பீடு செய்யப்படாதிருந்தமையும் அது

தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்தமையும் மற்றும் உடன்படிக்கையில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் மின்சாரம் மற்றும் நீர்க்கட்டணங்கள் தீர்க்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டன.

(ii) வருடாந்தம் சுத்திகரிப்பு கட்டணம் ரூபா 4,812,060 ஆக இருந்ததுடன் பாதுகாப்பு சேவைக் கட்டணம் ரூபா 4,698,300 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மொத்த கட்டிடத்திற்கான செலவினம் ரூபா 39,069,960 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் ஒரு நபரின் அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்கான செலவினம் ரூபா 136,132 ஆகக் காணப்பட்டது.

**(ஊ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடத்துதல்**

2017 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்ட மிகையான 122 பொருள் அலகுகள் மற்றும் பற்றாக்குறையான 295 பொருள் அலகுகள் தொடர்பாக மெய்மையாய்வுச் சபை வழங்கிய பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(எ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்**

அமைச்சுக்குச் சொந்தமான 02 மோட்டார் வாகனங்கள் மின்சக்தி மற்றும் புத்துருவாக்க அமைச்சினாலும், மேலும் ஒரு மோட்டார் வாகனம் சனாதிபதி செயலகத்தினாலும் 2015 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படுவதுடன் 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய MF/CG/02/(Cir) ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் முறையான பிரகாரம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஏ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான 09 வாகனங்கள் அமைச்சினால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய MF/CG/02/(Cir) ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 நட்டமும் இழப்பும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் போது 05 வாகனங்கள் 09 சந்தர்ப்பங்களிலும், மீளாய்வாண்டின் போது 12 வாகனங்கள் 13 சந்தர்ப்பங்களிலும் விபத்திற்கு உட்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் இழப்பு நட்டங்களின் பெறுமதி இனங்காணப்படாதிருந்ததுடன் நட்டங்கள் பதிவேடுகளுக்கு கொண்டு வரப்பட்டு நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் (4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 104(2) பீ இன் பிரகாரம் நட்ட இழப்பு தாமதமின்றி அறவிடுவதற்கு முடியாது போனால் அந்த நட்ட இழப்பை அறவிடாமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அந்தப் பணத் தொகையை மிகைக் கட்டணமாக அறவிட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், 2016 ஆம் ஆண்டிலும், மீளாய்வாண்டிலும் முறையே 09 வாகன விபத்துக்களுக்கும் 12 வாகன விபத்துக்களுக்கும் ஏற்பட்ட நட்ட இழப்புக்களை குறிப்பாக இனங்காணப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2015 ஆம் ஆண்டில் ஆயிரம் கிராம உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 மே மாதத்தின் போது 1412 கிராம உத்தியோகத்தர் அளவில் சேர்க்கப்பட்டிருந்தனர். எனினும், 2018 ஆகஸ்ட் அளவில் மேலும் 939 வெற்றிடங்கள் காணப்பட்டமையால் அமைச்சின் பிரதான நோக்கமான மக்களுக்கு மிகவும் சமீபமான பங்குபற்றலுடன் அபிவிருத்தி நுழைவுடனான மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய நிர்வாக பொறிமுறை ஒன்றை தாபிக்கும் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 2.8 முகாமைத்துவ நலிவுகள்

34 கிராம உத்தியோகத்தர்களுக்கான இயலளவு அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று 2017 சனவரி 09 ஆந் திகதி முதல் 13 ஆந் திகதி வரை இந்தியாவில் நடாத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக கிராம உத்தியோகத்தர்களை தெரிவு செய்யும் போது காலி மாவட்டம் தவிர ஏனைய மாவட்டங்களில் இருந்து ஒரு உத்தியோகத்தர் நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், தெரிவு செய்யும் நிபந்தனைகளுக்கு இணங்காத வகையில் காலி மாவட்டத்தில் 06 கிராம உத்தியோகத்தர்களுக்கு தகைமைகள் உறுதிப்படுத்தப்படாமல் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

(ஆ) 2016 திசெம்பர் 01 ஆந் திகதிய உள்நாட்டலுவல்கள் அமைச்சு செயலாளரின் நினைவூட்டல் பத்திரத்தின் படி 35 உத்தியோகத்தர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்குபற்றுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும், 38 உத்தியோகத்தர்களுக்காக விமான பயணச் சீட்டுக்கள், உணவு பானம், தங்குமிட வசதிகள் போன்றவற்றை வழங்கியதன் காரணமாக ரூபா 574,121 தொகையினை மேலதிகமாகச் செலவிட வேண்டியேற்பட்டிருந்தது.

## 2.9 பொது மக்களின் சேவைகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தகவல் அறியும் சட்டத்தின் பிரகாரம் பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவதற்காக ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும், மீளாய்வாண்டில் கிடைத்த 56 தகவல்கள் கோரிக்கைகளில் 16 கோரிக்கைகளுக்கு மாத்திரம் தகவல் வழங்கப்பட்டிருந்ததுடன் நிராகரிக்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் முறையே 10 மற்றும் 03 ஆக இருந்த போதிலும், நாளதுவரையாக்கப்பட்டுக் காணப்படுகின்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை 27 ஆன கணிசமான அளவைக் கொண்டிருந்தது.

(ஆ) பொதுமக்கள் சமர்ப்பித்த தகவல்கள் கோரிக்கைகள் ஒவ்வொரு பிரிவு ஊடாக மேற்கொள்ளப்பட்டமையால் அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.10 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் தமது விடயப்பரப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியுள்ளது தொடர்பாக தெளிவுபடுத்தப்படவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட பிரகாரம் ஆண்டு 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அமைச்சினால் தெளிவுபடுத்தப்படாமையின் காரணமாக அந்தப் பணியுடன் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் இலக்குகளை அடைய வேண்டிய கட்டங்களில், இலக்கின் அடிப்படையில் அடையப்பட்டவைகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.11 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை பயன்படுத்துதல்.**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 03 ஆண்டு காலப்பகுதியில் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2015 | மீண்டெழுபவை | 7,983.6 | 7,354.3 | 629.2 | 7.88 |
| | மூலதனம் | 16,706.5 | 14,346.1 | 2,360.3 | 14.12 |
| | **மொத்தம்** | **24,690.1** | **21,700.4** | **2,989.2** | **12.10** |
| 2016 | மீண்டெழுபவை | 9,440.8 | 7,602.3 | 1,838.4 | 19.47 |
| | மூலதனம் | 12,765.9 | 6,015.4 | 6,750.5 | 52.87 |
| | **மொத்தம்** | **22,206.7** | **13,617.7** | **8,588.9** | **38.67** |
| 2017 | மீண்டெழுபவை | 8,916.4 | 7,924.5 | 991.9 | 11.12 |
| | மூலதனம் | 18,025.6 | 9,282.8 | 8,742.8 | 48.5 |
| | **மொத்தம்** | **26,942.1** | **17,207.3** | **9,734.7** | **36.1** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தாமை**

03 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1.8 மில்லியன் தொகையான மொத்த தேறிய நிதிஏற்பாடு எந்தப் பயன்படுத்தலுமின்றி முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமை**

மீளாய்வாண்டில் 26 செலவின விடயங்களுக்குரிய மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 21,743.9 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அந்த செலவின விடயங்களுக்குரிய மொத்தச் செலவினம் ரூபா 12,124.4 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் மொத்த சேமிப்பின் அளவு ரூபா 9,619.5 மில்லியனாக இருந்ததுடன் அந்த சேமிப்புக்கள் மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் 16 சதவீதத்திற்கும் 94 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(இ) நிதிப்பரமாணம் 74 இன் பிரகாரம் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் 07 சந்தர்ப்பங்களின் போது ரூபா 5,128.2 மில்லியன் தொகையான மேலதிக நிதிஏற்பாட்டை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 2,105.8 மில்லியன் அதாவது 26 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சிற்குரிய சேமிப்புக்களுக்கான பிரதான காரணம் பொதுத்திறைசேரியிலிருந்து கட்டுநிதி கிடைக்காமை என செயலாளரால் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**2.12 மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அமைச்சினால் 2017 ஆம் ஆண்டிற்காக வருமானக் குறியீட்டு இலக்கம் 10.03.07.99 இற்காக கூட்டு மொத்தமாக ரூபா 182.44 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 194.86 மில்லியன் வருமானம் சேமிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 106.80 சதவீதமாக இருந்தது.

**10.03.07.99 என்ற வருமானக் குறியீடு – அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஏனைய வருமானம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 மாவட்ட செயலகங்களின் ஆரம்ப மதிப்பீட்டுப் பெறுமதி திருத்தம் செய்யும் போது 10 சதவீதம் முதல் 35 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த செயலகங்களில் திருத்தப்பட்ட மதிப்பீட்டை விஞ்சி உள்ளபடியான வருமானம் 40 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

(ஆ) வருமான மதிப்பீடு திருத்தம் செய்யும் போது 11 மாவட்ட செயலகங்களினால் ஆரம்ப மதிப்பீட்டுப் பெறுமதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அது 1.8 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையிலான வீச்சைக் கொண்டிருந்தது. அதில் 08 மாவட்ட செயலகங்களில் திருத்தப்பட்ட மதிப்பீட்டை விஞ்சி 11.36 சதவீதம் முதல் 101.68 சதவீதம் வரையிலான வீச்சில் வருமானம் அதிகரித்திருந்தது.

(இ) 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசிறைக் கொள்கை சுற்றறிக்கையின் பிரகாரம் வருமான எதிர்வுகூறல் மற்றும் மதிப்பீட்டின் போது மாற்றமடைகின்ற பொருளாதார நிலைமையினதும் உள்ளபடியான வருமான செயற்படுநிலையினதும் அடிப்படையில் மதிப்பீடு தொடர்ச்சியாகத் திருத்தப்பட வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், 10 மாவட்ட செயலகங்களினால் 2017 மே 31 ஆந் திகதியில் கிடைத்த உள்ளபடியான வருமான நிலைமையினை சரியானதாக கவனத்தில் கொள்ளப்படாமல் வருமான மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

**2.13 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 12101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 650.00 | 643.03 | 230.00 | 235.20 | 1,600.00 | 797.38 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) மீதியைத் தீர்த்தல்**

15 மாவட்ட செயலகங்களின் முற்பணக் கணக்கு 'பீ' கணக்கிற்குரிய திறைசேரி புத்தகங்கள் மற்றும் திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் மீதிகளுக்கிடையே ரூபா 920,182 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. வேறுபாடுகளை சீராக்கிக் கொள்வதற்கு தேவையான செயல்நடவடிக்கைககள் அமைச்சு மற்றும் பிரதேச செயலகங்களினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நிலுவைக் கடன் மீதி அறவிடப்படாமை**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை, பணியிட மாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன்மீதி வரவு ரூபா 2,217,324 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதி 01 வருடம் முதல் 04 வருடங்கள் வரையிலான காலவீச்சில் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்த நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

**(இ) இடமாற்றலாகி வந்த உத்தியோகத்தர்களின் கடன்மீதி அறவிடப்படாமை**

2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 14 மாவட்ட செயலகங்களில் இடமாற்றலாகி வந்த 50 உத்தியோகத்தர்களிடமிருந்தும், உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறிப்பிடப்படாத 02 மாவட்ட செயலகங்களிலிருந்தும் கூட்டுமொத்தமாக ரூபா 2.79 மில்லியன் கடன் மீதிகளை உரிய மாவட்ட செயலகங்களின் மாதாந்த கணக்கு பொழிப்பின் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.14 பொது வைப்புக் கணக்குகள்**

அமைச்சின் கீழ் வரும் 05 பொது வைப்புக் கணக்குகளில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6.45 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டின் திறைசேரி அச்சிடல் குறிப்புக்களின் பிரகாரம் பொது வைப்புக் கணக்கு இலக்கம் 6000/0000/00/0008/0012/000 இல் மீதி ரூபா 955,688 தொகை மீளாய்வாண்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் மாற்றமின்றிக் காணப்பட்டமையின் காரணமாக கணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**2.15 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணுதல்**

அமைச்சினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்படாமல் இருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகயும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | பொது 267 இன் பிரகாரம் சம்பவத்திரட்டு புத்தகக் குறிப்புக்கள் | நிதிப்பிரமாணம் 1645(அ) | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) | நட்ட, இழப்பு தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை |
| (iii) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(I) | பேணப்பட்டிருக்கவில்லை |
| (iv) | கணனி, துணைப் பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |

**2.16 இணங்காமைகள்**

**2.16.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்ளுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நியதிச் சட்ட ஏற்பாடுகள் | | |
| 1951 இன் 14 ஆம் இலக்க மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் 151(2) மற்றும் 151(3) ஆம் பிரிவுகள் | - | கவனயீனமாக அல்லது அபாயகரமான முறையில் அல்லது கண்மூடித்தனமான வேகத்தில் பெருந்தெருக்களைப் பயன்படுத்துகின்ற நபர்கள் தொடர்பில் எந்தவொரு கவனமும் இன்றி மோட்டார் வாகனங்களைச் செலுத்தியதன் காரணமாக 2016 ஆம் ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போது அமைச்சிற்குரிய வாகனங்கள் 06 சந்தர்ப்பங்களின் போது விபத்துக்குள்ளாகியிருந்ததுடன், நட்டம் கணிப்பிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>---------------------------------------------- | | |
| | நிதிப்பிரமாணம் 103(ஆ) | - | 2016 ஆம் ஆண்டிலும் 2017 ஆம் ஆண்டிலும் ஏற்பட்ட 02 வாகன விபத்துக்கள் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை<br>---------------------------------------------- | | |
| | (i) 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | - | அரசாங்கத்தின் சகல உத்தியோகத்தர்களும் தமது வருகை, வெளிச்செல்கைகளை உறுதிப்படுத்துவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். அமைச்சின் சாரதிகளால் தமது வருகையைக் குறிப்பிடுவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், வெளிச் செல்கையைப் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 2014 நவம்பர் 17 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் XXX ஆம் பந்தி | 425,880 | உள்நாட்டலுவல்கள் அமைச்சில் II/III ஆம் தரத்தில் கணக்காளராக கடமையாற்றுகின்ற ஒரு உத்தியோகத்தர் 2015 ஆம் ஆண்டின் யூலை முதல் 2018 பெப்ரவரி வரையான காலப்பகுதியின் போது உதவிச் செயலாளரின் அங்கீகாரத்துடன் தனிப்பட்ட பாவனைக்காக வாகனத்தைப் பயன்படுத்தியதன் காரணமாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு புறம்பானதாகச் செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |

## 2.17 மனிதவள முகாமைத்துவம்

----------------------------------------------

### 2.17.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

அமைச்சின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகைப் பதவியணி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 7,488.78 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 34 | 24 | 10 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 6 | 3 | 3 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 193 | 187 | 6 | 26 |
| (iv) | ஆரம்ப நிலை | 89 | 72 | 18 | - |
| (v) | அமைய / ஒப்பந்த | - | 1 | - | - |
| | மொத்தம் | 322 | 287 | 37 | 26 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் எண்ணிக்கையை விஞ்சி சேர்க்கப்பட்டிருந்த 26 உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பான தகவல்கள் சரியாக சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் தொடர்பாக ஒன்றுக்கொன்று முரண்பாடான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டமையின் காரணமாக பதவியணியினர் தொடர்பான சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 இன் பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மொத்த பதவியணியினர் காண்பிக்கப்படாதிருந்ததுடன், உள்ளபடியான பதவியணியினர் 18,425 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அமைச்சு சமர்ப்பித்த பதவியணியினர் தகவல்களின் உள்ளபடியான பதவியணியினர் 287 ஆகக் காண்பிக்கப்படாமையினால் 2015 ஆம் ஆண்டின் போது பொருளாதார அலுவல்கள் அமைச்சிலிருந்து இந்த அமைச்சிற்கு நியமிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் திட்டமிடல் சேவையின் உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்ளாமை இதற்கான காரணமாக இருந்தது.

**(ஈ) பதவியணியினருக்குப் பயிற்சியளித்தல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பதவியணியினருக்கு தினந்தோறும் பயிற்சியளிக்க வேண்டிய தேவை இருந்த போதிலும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் சகல உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அமைச்சினால் அந்த பதவியணியினரைப் பயிற்சியளித்தல் தொடர்பான போதியளவான தகவல்கள் பேணப்படாதிருந்தமையினால் சரியாக பயிற்சி பெற்ற எண்ணிக்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் எந்தவொரு வகையிலும் பயிற்சியொன்றை பெறாதிருந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 152 ஆகும். மேலும், பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் மீண்டும், மீண்டும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்காக அனுப்பப்பட்டிருந்தனர்.

(iii) மீளாய்வாண்டு மற்றும் கடந்த 02 ஆண்டுகளில் பயிற்சியளித்தல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டின் பிரகாரம் பயன்படுத்துதல் 43.04 சதவீதம் முதல் 69.64 சதவீத் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.